**தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) இந்த அறிக்கையின் 1.6.1(ஆ)i பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மூலதனச் செலவினம்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவினங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரண்டு மூலதனச் செலவின விடயங்களில் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மொத்தச் செலவினம் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மொத்த செலவினங்களுக்கு இடையே ரூபா 2,097,360 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் 292-2-3-17-2507 செலவின விடயத்தில் சேமிப்பொன்று இல்லாத போதும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 284,081 ஆன சேமிப்பொன்று காணப்பட்டது. | - மேற்படி - | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

**1.6.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கும் போது 3 பிரதான பேரேட்டு விடயங்களின் மீதிகள் மற்றும் 10 நிதியல்லாத சொத்துக்கள் விடயங்களின் மீதிகளில் ரூபா 129,262,877 ஆன வேறுபாட்டிற்கு காரணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,592,330,789 ஆக இருந்த போதும் SA - 82 திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் அது ரூபா 2,507,277,259 ஆக இருந்தமையால் ரூபா 85,053,530 ஆன வேறுபாடொன்று இருந்தது. | சீராக்குமாறு பொது திறைசேரிக்கு எழுத்துமூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கொள்வனவுகளின் மொத்தம் ரூபா 112,977,257 ஆக இருந்த போதிலும் இலக்கம் 2102, 2103, 2014 மற்றும் 2105 ஆம் செலவின விடயங்களின் கீழ் கொள்வனவுப் பெறுமதி ரூபா 2,947,881 ஆக இருந்ததால் ரூபா 110,029,376 ஆன வேறுபாடொன்று காணபபட்டது. | ஏற்றுக்கொள்வதாக | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு விதிக்கோவையின் பிரகாரம் பேணப்பட வேண்டிய பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.<br>(i) நியமனம் மற்றும் பதவி உயர்வு<br>(ii) சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்<br>(iii) சேவையிலிருந்து இராஜினாமா செய்தவர்கள்<br>(iv) பதவியை வரிதாக்கிச் சென்றவர்கள்<br>(v) வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள்<br>(vi) ஓய்வு பெறச்செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் | விடயத்திற்குரிய உத்தியோகத்தரால் நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | உரிய பதிவேடுகளை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டு மூலம் தலைப்பு இலக்கம் 292 - கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 1,253,000,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அதற்காக ரூபா 1,147,730,718 ஆன கட்டுநிதி மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 105,269,282 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. இதன் பிரகாரம் போதுமான அளவு பணம் கிடைக்காமையால் 3 செலவின விடயங்களில் ரூபா 27,014,231 ஆன நிதி ஏற்பாடு சேமிக்கபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்வதாகவும் கட்டுநிதியை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையால் செலவின விடயங்களில் சேமிப்பு இடம்பெற்றதாக | கிடைக்கப்பெற்ற கட்டுநிதி மூலம் ஆகக்கூடிய பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் |

## 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் 5 வருமானத் தலைப்புகளின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் வருமான சேகரிப்பு மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 04 சதவீதம் முதல் 149 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் வருமான மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாகவும் அவ்வேறுபாட்டை எதிர்காலத்தில் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் | முன்னைய தரவுகளை அடிப்படையாக கொண்டு இயலுமானவரை நடைமுறைச்சாத்தியமாகவும் சரியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 18 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 115,682,791 தொகை பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச்சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து 16 சதவீதம் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்வதாக | நடைமுறைச்சாத்தியமாகவும் சரியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் 05 செலவின விடயங்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பட்டியல்களின் பெறுமதி ரூபா 5,643,357 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு III) அது ரூபா 4,230,771 என ரூபா 1,412,586 என குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாகவும் எதிர்காலத்தில் இச்சிக்கல்களைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.5 கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை செயற்திறனாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) இலங்கை சநனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i XII ஆம் அத்தியாயத்தின் 1.2, 1.3 மற்றும் 22 ஆம் பிரிவு | விடுமுறைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் அங்கீகரித் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சீப்புக்குளம் கால்நடை | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருக்க | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுப்பாட்டுக் கல்லூரியில் சேவை புரியும் உத்தியோகத்தரொருவர் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 306 நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றிருந்தார் | உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | எடுக்கப்பட வேண்டும் |
| ii | XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | 13 உத்தியோகத்தர்களால் 31 நாட்களில் வருகை மற்றும் வெளியேறல் கையொப்பம் இட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருக்க உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 155 | 2017 ஆம் ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்குள் வழங்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகளுக்காக 48 நாட்கள் முதல் 196 நாட்கள் வரை தாமதித்து பதில் அளிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிப்புக்குளம் மற்றும் கரந்தகொல்ல கால்நடை வளர்ப்புக் கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறிகளை பயில்வதற்காக கடந்த 4 கல்வியாண்டுகளில் 483 முதல் 693 வரையான விண்ணப்பங்களின் எண்ணிக்கை பெறப்பட்டிருந்த போதிலும், கல்லூரிகளில் பாடநெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 90 இலிருந்து 144 ஆக அல்லது 36 | ஏற்றுக்கொள்வதாகவும் கஷ்ட மற்றும் நீர் வசதிகள் குறைந்த பிரதேசமொன்றில் அமைந்துள்ள சிப்புக்குளம் கால்நடை பராமரிப்பு வளவினை பராமரிப்பதற்காக போதியளவு மனித வளம் மற்றும் நிதி | தற்போதுள்ள வளங்களை உயர்ந்த அளவில் பயன்படுத்த வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் முதல் 76 சதவீதம் வரை குறைவான அளவில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். போதுமான அளவில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தாமல் தேசிய நலனுக்காக டிப்ளோமா வைத்திருப்பவர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கால்நடை பராமரிப்பு கல்லூரிகளின் உள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் குறைப்பயன்பாட்டு நிலையில் இருந்தது. சிப்புக்குளம் கல்லூரியில் மாத்திரம் 129 ஏக்கர் காணி மற்றும் 21 வகையான கட்டிடங்கள் இருந்த போதும் இதற்கு போதிய நீர் வசதிகள் மற்றும் மனித வளங்கள் இல்லாமையே காரணமாக இருந்தது. | வளம் இல்லாமை இவ்விடத்தின் அபிவிருத்திக்கு தாக்கமளித்துள்ள பிரதான சிக்கலாகும் என்பதாக | |
| (ஆ) | கால்நடை நோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் தடுப்பூசி போடுவது மொத்த கால்நடைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அல்லாமல் நோய் ஆபத்தினை அடிப்படையாகக் கொள்ள வேண்டிய போதிலும் நோய் ஆபத்து பகுதிகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், நோய் கட்டுப்பாட்டுக்கான எந்தவொரு தந்திரோபாய திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட விரோதமான வகையில் சுகாதார சான்றிதழ்கள் இல்லாமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தர்ம நிறுவனங்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களின் அறிவுரைகள் இல்லாமலும் எவ்வித அறிவித்தலொன்றும் இல்லாமலும் புண்ணியத்தின் பொருட்டு வழங்குகின்றமையால் நோய் பரவல் அதிகரிப்பதாக | தந்திரோபாய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கால்நடை இனவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 3500 DF சீமன் வடி மற்றும் 20 பண்ணை மாடுகளையும் இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அச் செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | DF மாடுகளின் விந்தணுக்களை இறக்குமதி செய்வதற்காக கேள்வி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கேள்வி வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த வழங்குனரால் இதுவரை கால்நடை விந்தணுக்கள் வழங்கவில்லையெனவும் உலகளாவிய தொற்றுநோய் காரணமாக பண்ணை கால்நடைகளை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடு காரணமாக விலங்குகளை இறக்குமதி செய்ய முடியவில்லை எனவும் | திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 325000 சீமன் வடிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 218,835 வடிகள் அல்லது 67 சதவீம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்வதாகவும் நாட்டில் காணப்படும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் வருடாந்த பௌதீக இலக்கை நிறைவேற்ற முடியாதிருந்ததாக. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 400000 தடுப்பூசிகள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 225000 ஊசிகள் அதாவது 56 சதவீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கோழிகளுக்காக வெளிக்கள மட்டத்தில் 5916400 தடுப்பூசிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 3494271 ஊசிகள் அதாவது 59 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 140000 கால்நடைகளுக்கு காதுகளை அடையாளமிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 81025 கால்நடைகளுக்கு மாத்திரம் அடையாளம் இடப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த FMD தடுப்புசிகளில் 10 சதவீதம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்வதாகவும் தடுப்பூசிகளை தயாரிப்பதற்காக தேவையான மூலப் பொருட்களை 2020 ஆம் ஆண்டின் போது எதிர்பார்த்த பிரகாரம் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | - மேற்படி - |

## 3.4 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொல்கொல்ல விலங்கு நச்சுயியல் ஆய்வுகூடம் ரூபா 3,273,873 மதிப்பீட்டின் கீழ் 95 வேலை விபரங்களின் கீழ் மேம்படுத்துவதற்கும் பழுதுபார்ப்பதற்காக வும் ஒப்பந்த நிறுவனமொன்றுடன் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 29 பணிகள் மற்றும் வேலை முடிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அத்திகதி முதல் 2020 ஆகஸ்ட் 11 வரை 19 மாதங்கள் கடந்திருந்த போதும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. 95 வேலை விடயங்களில் 10 முழுமையாகவும் 06 பகுதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 2,262,204 தொகையான 78 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்காமையால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. | கிடைக்கப் பெறும் பணத்திலிருந்து பொது மக்களுக்கு உயர்ந்த சேவையொன்ற வழங்கப்படும் வகையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயன்முன்னேற்றம் கண்டிராத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.1.1(இ) வழிகாட்டலின் நியதிகளுக்கு புறம்பாக நிதிஏற்பாடு மேற்கொள்ளாமல் ரூபா 165,831,215 ஆன 3 கட்டிட நிர்மாணங்களுக்குரிய கட்டமைப்பு மற்றும் கட்டிடக்கலை திட்டங்களை தயாரிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது நிறுவனமொன்றுக்கு ரூபா 1,602,094 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 வரையிலும் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக | பெறுகை வழிகாட்டல் கோவை பின்பற்றப்பட வேண்டும் மற்றும் நிதி ஏற்பாடு செயற்திறனாக பயன்படுத்தப்பட்டு செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும் |
| (ஆ) | திருகோணமலை கால்நடை சுகாதார அலுவலக நிர்மாணத்திற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருடன் 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 12,182,590 தொகைக்கு 2016 நவம்பர் 07 ஆந் திகதி வேலைகள் முடிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 03 சந்தர்ப்பங்களில் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்த போதும் அத்திகதியில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் ஒரு பகுதி அதாவது ரூபா 6,996,885 ஆன வேலை நிறைவேற்றப் பட்டிருந்தது. ஆதலால் 2018 யூன் 18 ஆந் திகதி உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு செயற்பாடு கையளிக்கப்பட்டிருந்தது. | குறிக்கப்பட்ட காலப்பகுதியை 01 வருடமும் 05 மாத காலம் வழங்கப்பட்டிருந்த போதும் அக்காலப்பகுதயில் இச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தக்காரர் தவறியமை காரணமாக இந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. | மதிப்பீடு மற்றும் குறித்த நியதிகளின் பிரகாரம் நோக்கம் நிறைவேற்றப் படும் வகையில் உடன்படிக்கை காலப்பகுதியில் செயற் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

**3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்வதாகவும் எதிவரும் காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதி 255 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மூலம் வாய் மற்றும் மூக்கு நோய்களுக்காக பயன்படுத்தும் தடுப்பூசிகள் 100,000 கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,200,000 செலவிடப்பட்டிருந்தது. அதன் போது | | |
| (i) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.2 வழிகாட்டலுக்கு புறம்பாக கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தடுப்பூசிகளின் அளவு கேள்வி கோரல் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) வழங்கல் நிறுவனமொன்று மாத்திரம் ஒரு வடி ரூபா 82 வீதம் கூறுவிலையை | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கி இருந்தது. | | |
| (iii) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் வழங்குனர் ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்ட விலை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கூறுவிலையுடன் ஒப்பிடும் போது 136 சதவீதம் முதல் 73.51 சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அவசர தேவைப்பா டொன்றாக கருதி கொள்வனவு இடம் பெற்றுள்ளதாக | - மேற்படி - |
| (iv) | 2020 ஆம் ஆண்டின் போது மீண்டும் 300,000 தடுப்பூசிகள் கொள்வனவு செய்வதற்காக 2020 ஆகஸ்ட் 17 ஆந் திகதி கூறுவிலை கோரும் போது அந்த தடுப்பூசி வடியொன்று ரூபா 42.05 இற்கு வழங்குவதற்கு வழங்குனர் முன்வந்திருந்தார். | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |
| (v) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.12 வழிகாட்டலின் நியதிகளிலிருந்து விலகி ஆக்கபூர்வமான போட்டியொன்று இல்லையென தெளிவாக தென்படும் போது கிடைத்த கேள்வி மனுக்களை நிராகரித்தல் கிடைத்த கேள்வி மனுக்களை சந்தை விலைகளுடன் ஒப்பிடல், கிடைத்துள்ள ஒரே விலைகள் அதிகமாக இருந்தால், கேள்வி மனு விலையைக் குறைப்பதற்கு கேள்விதாரருடன் கலந்தரையாடல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆகஸ்ட் 17 ஆந் திகதி கூறுவிலை கோரும் போது கிடைத்திருந்த ரூபா 42.05 ஆன கேள்வியுடன் ஒப்பிடும் போது 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதி 255 இலக்க உறுதிச்சீட்டில் ஒன்று ரூபா 82 வீதம் கொடுப்பனவு செய்து 100,000 தடுப்பூசி வட்களுக்காக ரூபா 3,995,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது திரவ நைதரசன் 261,704 லீற்றரும் 2020 பெப்ரவரி வரை 41,404 லீற்றரும் என 303,108 லீற்றர்கள் ஒரு லீற்றர் ரூபா 74 வீதம் ரூபா 22,429,992 கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டின் போது கூறுவிலை கோரும் போது இரண்டு பேரால் ரூபா 62 மற்றும் ரூபா 74 என கூறுவிலைகளுக்கு இடையே அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.19(அ) வழிகாட்டலின் பிரகாரம் குறைந்த விலை தெரிவு செய்யப்படாமை காரணமாக ரூபா 3,140,448 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கேள்வி விதந்துரைககள் அனைத்தும் நிபந்தனைககள் இல்லாமல் இணங்கியிருந்தமை காரணமாக கூடிய விலை உடைய வழங்குனர் தெரிவு செய்யப்பட்டதாக | பெறுகை வழிகாட்டல் கோவையிலகுறிப்பிடப்ப ட்ட வழிகாட்டல்கள பின்பற்றப்பட வேண்டும். ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | தமது நிறுவனம் ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை நாட்களில் மூடப்படுவதுடன் அந்நாட்களில் கொள்வனவு செய்தால் ரூபா 3000 தொகை மேலதிகமாக அறவிடுவதாகவும் குறைந்த விலையான ரூபா 62 சமர்ப்பிக்கப்பட்ட வழங்குனரால் நிபந்தனையொன்று விதித்து இருந்தமை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவ்வழங்குனரை நிராகரிக்க பிரதான காரணமாக இருந்தது. ஒரு லீற்றர் ரூபா 62 வீதம் 261,704 லீற்றருக்கு ரூபா 16,225,648 பெறுமதிக்கு கொள்வனவு செய்தமையாலும் 2019 ஆம் ஆண்டில் பொது விடுமுறை மற்றும் வர்த்தக விடுமுறை தினங்கள் 28 உள்ளதால் ஒரு நாளைக்கு ரூபா 3,000 வீதம் 28 நாட்களுக்கு ரூபா 84,000 மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டால் ரூபா 16,309,648 தொகை மாத்திரம் செலவாகின்றது.<br>ஆதலால் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து இந்நிபந்தனையின் கீழ் கொள்வனவு செய்திருந்தால் திணைக்களத்திற்கு ரூபா 3,056,448 தொகையை சேமிக்க முடியுமாக இருந்திருக்கும் | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |
| (iii) | ஆகக்குறைந்த விலை வழங்குனரால் தமது கேள்வி நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கும் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளருக்கும் முறைப்பாடு செய்திருந்ததுடன் அது தொடர்பாக அந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு திணைக்களத்தினால் காண்பிக்கப்பட்ட பொறுப்பேற்றல் உறுதிப்படுத்தப் படவில்லை. | திணைக்களத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் சமூகமளித்திருந்த போதும் அக்கூட்ட அறிக்கை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கவில்லை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2020 ஆம் ஆண்டிற்காக திரவ நைதரசன் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பெறுகை செயற்பாடு முன்கூட்டியே ஆரம்பிக்கப்படாத காரணத்தினால் 2019 திசெம்பர் 21 ஆந் திகதி கூடிய பெறுகை குழு 2019 ஆம் கொள்வனவிற்காக 2018 நவம்பர் 15 ஆந் திகதிய பெறுகை குழு தீர்மானம் 2020 பெப்ரவரி மாதம் வரை மீண்டும் கொள்வனவு செய்யும் பெறுகை முறைமையின் கீழ் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்காக ஒரு லீற்றருக்கு ரூபா 74 வீதம் 41,404 லீற்றருக்காக ரூபா 3,063,896 கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |
| (v) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6 வழிகாட்டலின் பிரகாரம் முன்னைய வழங்கலின் பின்னர் விலை குறையவில்லை என நிறுவனம் உறுதிப்படுத்தினால் மாத்திரம் பொருட்கள் வழங்கலுக்காக மீண்டும் கட்டளை இடலாம். எனினும் 2020 ஆம் ஆண்டிற்குரிய கேள்வி கோரல் 2020 பெப்ரவரி 03 ஆந் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டதுடன் 2020 சனவரி 24 ஆந் திகதி கேள்விகள் திறக்கப்பட்டன. அதன் போது ஒரு வழங்குநரால் திரவ நைதரசன் லீற்றர் ரூபா 60,25 இற்கு வழங்குவதற்கு முன்வந்திருந்தார். இதன் பிரகாரம் மீண்டும் கட்டளையிடும் முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 41,401 லீற்றருக்காக திணைக்களத்திற்கு ஒரு லீற்றருக்கு ரூபா 13.75 வீதம் ரூபா 569,305 தொகை இழக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிப்புக்குளம் கால்நடை வளர்ப்பு கல்லூரிக்கு சொந்தமான 4 அரச விடுதிகள், சுற்றுலா விடுதியொன்று | அனைத்து கட்டிடங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு | கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட 09 கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. இதில் 05 கட்டிடங்கள் திருத்தம் செய்ய வேண்டிய நிலைமையில் காணப்பட்டதுடன் 04 பதவியணியினர் வெற்றிடங்கள் காரணமாக பயன்பாடின்றி காணப்பட்டது. | எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சிப்புக்குளம் கால்நடை வளர்ப்பு கல்லூரியின் பயன்பாட்டிற்காக ரூபா 1,553,000 தொகை செலவிடப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட விதை பாதுகாப்பு இயந்திரம் செயற்படாமை காரணமாக 03 ஆண்டு காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காண்பட்டது. | இங்கு பொருத்தப்பட்டு இயந்திரத்தில் காணப்படும் தொழில்நுட்ப கோளாறு சீர் செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தும் சந்தர்ப்பத்தில் இந்த விதை பாதுகாப்பு இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுக்க உள்ளதாக | காணப்படும் வளங்களை உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் |
| (இ) | சிப்புக்குளம் கால்நடை வளர்ப்பு கல்லூரியிலிருந்து கால்நடை வளர்ப்பு கல்விக்காக பயன்படுத்தப்படுகின்ற 357 விலங்குகள் வைக்கப் பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் கால்நடைகளின் உணவு தேவைக்காக ரூபா 1,965,700 செலவிடப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டில் எவ்வித கல்வி செயற்பாடொன்றும் இடம் பெற்றிருக்கவில்லை. | பாடநெறிகளை நவீனமயப்படுத்தும் தேவைப்பாட்டின் பேரில் அரச அதிகாரிகள் எடுத்துள்ள தீர்மானங்களின் பிரகாரம் கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறி நடாத்துவதை இடை நிறுத்தியிருந்த போதும் பயிற்சி நிலைய மொன்றாக செயற்படுத்தியுள்ளதாக | - மேற்படி - |
| (ஈ) | சிப்புக்குளம் கால்நடை வளர்ப்பு கல்லூரி அமைந்துள்ள 129 ஏக்கர் காணி 1985 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டு வந்த போதும் 2020 ஆம் ஆண்டு வரை திணைக்களத்திற்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை. | காணிகளின் கையேற்கும் செயற்பாடு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக | முறையாக கையேற்றல் இடம் பெறவேண்டும். |
| (உ) | கரந்தகொல்ல கோழி ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள காணி 25 ஏக்கர்களாக இருந்த போதும் அதில் 06 ஏக்கர் அளவிலான காணி எவ்வித கல்வி செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப் படாமல் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்வதாக | ஆராய்ச்சி நிலையங் களிலுள்ள சொத்துக்களில் இருந்து உச்ச அளவிலான பயனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2015 ஆம் ஆண்டில் அப்போது காணப்பட்ட தாரா கொட்டில் ரூபா 1,562,000 செலவிடப்பட்டு மாட்டு தொழுவமாக மாற்றப்பட்டிருந்த போதும் 2020 ஒக்தோபர் வரையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | பயிற்சி பெற்ற ஊழியர்கள் இல்லாமல் இனவிருத்தி பண்ணையொன்று பேணிச் செல்ல முடியாதிருந்துடன் ஊழிய தேவைப்பாடு கிடைத்த உடன் இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதாக | - மேற்படி - |

## 3.9 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான வகையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்குவது இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டிய 03 கணக்காய்வு விசாணைகளுக்காக பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தாமதமின்றி பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கால்நடை சுகாதாரப் பிரிவிற்குரிய களஞ்சியம் 2020 ஒக்தோபர் மாத பரிசோதனையின் போது 24 வகைகளுக்குரிய 2462 பொருட் உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாகவும் 82 வகைகளுக்குரிய 984 பொருள் உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 02 | இரசாயன பொருட்கள் முடிவடைந்து மீண்டும் கொள்வனவு செய்வதற்கு மீண்டும் காலம் எடுப்பதால் அத்தாமத காலத்தில் உரிய | தேவைப்பாட்டை இனங்கண்டு நடைமுறைச் சாத்தியமான வகையில் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் 10 வகை பொருட்களுக்குரிய 72 களஞ்சிய பொருள் உருப்படிகள் களஞ்சியத்திற்கு கிடைத்த திகதி முதல் 5 ஆண்டுகள் கடந்திருந்த போதும் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 24 வகைக்குரிய 5,872 களஞ்சிய பொருள் உருப்படிகள் காலாவதியாகியிருந்தன. | பரிசோதனையை மேற்கொள்வதில் சிக்கல் உருவாகுவதால் மிகை தொகையை பேணிச் செல்ல வேண்டியுள்ளதாகவும் கொவிட் நிலைமை காரணமாக காலாவதியாகி இருந்ததாகவும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) திணைக்களம் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக அறிந்திருந்த போதும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வதனை மதிப்பிடுவதற்காக அளவுகோல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முன்னைய ஆண்டில் அரசின் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் பிரகாரம் திணைக்களத்தினால் குறி காட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்றை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக அறிந்து அந்நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்து தொடர்பாக அக்கரை காட்டும் தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக பங்குபற்றலில் நுழைவொன்று நிரூபணமாகவில்லை. | முன்னைய ஆண்டின் அரசின் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் பிரகாரம் திணைக்களத்தினால் குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்றை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (இ) | நிறுவனத்தினால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் அரசின் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் பிரகாரம் திணைக்களத்தினால் குறிகாட்டிகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்றை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

**5 மனிதவள முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)(i) | திணைக்களத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 22 பதவிகளில் 63 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களில் 4 மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிகளும் 06 பிரதான விஞ்ஞான நிபுணர் பதவிகளும் 15 கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர்கள் பவிகளும் மிகையாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திணைக்களத்தின் தேவைப்பாட்டை அடிப்படையாக கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திணைக்களத்திற்காக 61 கால்நடை வைத்திய உத்தியோகத்தர்கள் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 70 பேர் இணைக்கப் பட்டிருந்தமையால் 9 கால்நடை வைத்தியர்கள் மிகையாக இருந்தனர். | 07 கால்நடை வைத்திய உத்தியோகத்தர்களுக்கு கால்நடை தனிமைப்படுத்தல் உத்தியோகத்தர் பெயரும் 10 கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர் பெயரும் வழங்குவதற்கு எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (iii) | திணைக்களத்திற்காக புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவியொன்று அங்கீகரிக்கப்படாதிருந்த போதும் ஒரு உத்தியோகத்தர் இணைக்கப்பட்டிருந்தனர். | அப்பதவியை திணைக்களத்திற்கு அங்கீகரித்துக் கொள்வதற்காக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | - மேற்படி - |
| (iv) | ஆரம்ப மட்டத்தில் 103 வெற்றிடங்கள் காணப்பட்டதால் வெளிக்கள கடமைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டன. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்பும் மீண்டும் அறிவிக்கும் வரை இடைநிறுத்தப் பட்டுள்ளதாக | திணைக்களத்தின் தேவைப்பாட்டை அடிப்படையாக கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஏப்ரல் 05 ஆந் திகதிய PSC/EST/3/4/2/2012 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கடிதத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆரம்ப பயிற்சி பெறாத ஊழியர் வகையின் இடமாற்றக் கோவையின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்துள்ள ஊழியர்களை இடமாற்றத்திற்கு கண்டிப்பாக உள்ளாக வேண்டிய போதிலும் 11 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை ஒரே இடத்தில் சேவை புரிந்த 16 ஊழியர்கள் தொடர்பாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இடமாற்றம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்கோவை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரச துறைக்குள் மனிதவள அபிவிருத்திக்குரிய 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் செயலாற்றல் மதிப்பீட்டுப் பத்திரத்தைப் பயன்படுத்துதல் செயலாற்றல் உடன்படிக்கை களில் கைச்சாத்திடல் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்தல், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக பதவியணியினரை ஈடுபடுத்தும் முறை தொடர்பான திட்டமொன்றை தயாரித்தல் போன்ற தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரிவு மட்டத்திலிருந்து திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |